

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு
(2011-2012)

(பதினான்காவது பேரவை)

பதினொன்றாவது அறிக்கை


11-1-2012 ஆம் நாளன்று விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்: 2-.MAY 2012)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை – 600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை



மனுக்கள் குழு
(2011- 2012)

(பதினான்காவது பேரவை)

பதினொன்றாவது அறிக்கை

11–1–2012 ஆம் நாளன்று விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

	பக்கங்கள்
1. குழு உறுப்பினர்கள்	iii
2. அறிக்கை—	v
இணைப்பு-I	1–15
இணைப்பு-II	19–37
இணைப்பு-III	41–48




தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2011–2012)

(பதினான்காவது பேரவை)

(2011–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3–ஆம் நாள் நியமனம் செய்யப்பெற்றது)

தலைவர்

1. திரு. ப. மோகன்
   அரசு தலைமைக் கொறடா

உறுப்பினர்கள்

2. திரு. ஆர். அருள்செல்வன்
3. திரு. பா. கணேசன்
4. திரு. ஆர்.என். கிட்டுசாமி
5. திரு. எஸ்.எஸ். சிவசங்கர்
6. திரு. டி. சுரேஷ்குமார்
7. திரு. ந. நஞ்சப்பன்
8. திரு. கே. பொன்னுசாமி
9. திரு. ஆ. ராமசாமி
10. திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி

*11. டாக்டர் த. ஹரிதாஸ்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன் .. செயலாளர்

திருமதி கு. இந்துமதி .. துணைச் செயலாளர்

திரு. மா. கோபாலகிருஷ்ணன் .. சார்புச் செயலாளர்.

---

* (13–01–2012 முதல்)


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு (2011–2012)

(பதினான்காவது பேரவை)

பதினொன்றாவது அறிக்கை

முன்னுரை

2011-2012-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் பதினொன்றாவது அறிக்கையினை மனுக்கள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டம்

14-07-2011-ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற மனுக்கள் குழுவின் கூட்டத்தில் விருதுநகர் மாவட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்ய 11-01-2012-ஆம் நாளன்று விருதுநகர் மாவட்டத்தில் குழுவின் கூட்டத்தை கூட்டலாம் என குழு முடிவு செய்தது. அம்மாவட்டத்திலுள்ள பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட 133 மனுக்களில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதிகளுக்குட்பட்டிருந்த 90 மனுக்கள் மீது அறிக்கை அனுப்பக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்ட பதிலறிக்கைகளில் 45 மனுக்கள் மீதான அறிக்கைகள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றிற்கு விரிவான பதிலறிக்கைகள் தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2012-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 11-ஆம் நாளன்று விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள மாநாட்டு அரங்கில் குழு கூடியது.

அக்கூட்டத்தில் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மு. பாலாஜி, இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில், ,விருதுநகர் மாவட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட அரசுத் துறை அலுவலர்கள் குழு முன் பதில்அளித்தனர். சம்பந்தப்பட்ட மனுதாரர்களும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர். ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்ற 45 மனுக்களைக் குழு ஆய்வு செய்தது. அவற்றுள் 14 மனுக்கள் குறித்துக் குழு தனது பரிந்துரைகளை அளித்தது. 20 மனுக்கள் மீது அளிக்கப்பெற்ற அரசுத் துறைகளின் பதிலுரைகள் படித்துப் பதிவு செய்யப்பெற்றன. மீதமுள்ள 11 மனுக்களுக்கான துறைகளின் பதிலுரைகளை ஏற்று அவை நிறைவேற்றப் பெற்றதாகக் கருதலாம் எனக் குழு முடிவு செய்தது.

குழு பரிந்துரை அளித்த மனுக்களின் விவரங்கள் இணைப்பு-I-இல் அளிக்கப்பட்டுள்ளன. படித்துப் பதிவு செய்யப்பெற்ற மனுக்களின் விவரங்கள் இணைப்பு-II-இல் அளிக்கப்பட்டுள்ளன. நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு-III-இல் அளிக்கப்பட்டுள்ளன.

19–4–2012ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வறிக்கைக்குக் குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை 600 009,
19–4–2012
சித்திரை திங்கள் 7 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு–2043.

ப. மோகன்,
தலைவர்,
மனுக்கள் குழு.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	835	திரு. என். பாலகிருஷ்ணன், தலைவர், தயாளன் ராஜேஷ் காலனி குடியிருப்போர் நல சங்கம், விருதுநகர்.	பூங்கா அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
விருதுநகர் வார்டு எண். 36, எம்.எஸ்.பி.நகர் பகுதியிலுள்ள வி.என்.பி.ஆர். பூங்கா அபிவிருத்தி செய்யும் பொருட்டு ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கருத்துரு தயார் செய்யப்பட்டு ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர அபிவிருத்தி திட்ட சுழல் நிதியின் கீழ் நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு 25—11—2011—ல் அனுப்பப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி பெறப்பட்டவுடன் பணிகள் துவங்கப்படும். மேலும் தாயளன் ராஜேஷ் காலனியில் புதிதாக பூங்கா அமைக்க, வரும் நிதியாண்டில் நகராட்சி நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். [ஆணையாளர் (பொ), விருதுநகர் நகராட்சி அவர்களின் கடித எண். 9363/2009/எப்1 நாள்: 3—1—2012.]	விருதுநகர் வார்டு எண். 36, எம்.எஸ்.பி. நகர் பகுதியிலுள்ள வி.என்.பி.ஆர் பூங்கா அபிவிருத்தி பணியினையும், ஏனைய பூங்கா பராமரிக்கும் பணியினையும் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	841	திரு. வெ. இராமசாமி, த/பெ. வெள்ளையத்தேவர், நடுவப்பட்டி (ஈஞ்சார் அஞ்சல்), சிவகாசி (வழி) – 626 124, விருதுநகர் மாவட்டம்.	விருதுநகர் மாவட்டம் – சிவகாசி வட்டம், ஈஞ்சார் கிராமம் – உட்கடை நடுவப்பட்டியில் ஊரின் தென்புறம் உள்ள பெரிய ஓடையில் மேம்பாலம் கட்டுதல் சம்பந்தமாக.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மேற்கண்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள ஓடை அமைந்துள்ள ஈஞ்சார் – நாகலாபுரம் சாலை (இதர மாவட்ட சாலை) கி.மீ. 2/10ல் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், சிவகாசி அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு தற்பொழுது ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி பாலப்பணிக்கு நபார்டு வங்கி அனுமதிக்காக தலைமைப் பொறியாளர் (நெ.), நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், சென்னை அவர்களின் கடித எண். 9801/2011/உபொ 7/நாள் 29–12–2011 வாயிலாக பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. [கோட்டப் பொறியாளர் (நெ), நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், பரமக்குடி அவர்களின் ந.க எண். 1326/2011/இ.வ.அ2/நாள்: 04–01–2012.]	விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், ஈஞ்சார் கிராமம், உட்கடை நடுவப்பட்டியில் ஊரின் தென்புறம் உள்ள பெரிய ஓடையில் மேம்பாலம் கட்டும் இப்பணியினை நபார்டு திட்டத்தின் கீழ் செய்து முடிக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
3	842	திரு. வி. செல்வகுமரன், செயலாளர், அண்ணா தொழிற் சங்கம், காரியாபட்டி கிளை.	காரியாபட்டி கிளை அரசு போக்குவரத்து பணிமனைக்கு நிரந்தர கட்டிடம் அமைத்து தர கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

காரியாபட்டி பேரூராட்சிக்குட்பட்ட கிராம புல எண் 415ல் உள்ள 4.94 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தை வழங்க அரசு போக்குவரத்துக் கழகம் மாவட்ட நிர்வாகத்தை கேட்டுக் கொண்டது. மேற்கண்ட கோரிக்கை நீர்பிடி புறம்போக்கு என்பதால் நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வருவாய் துறை மூலம் வேறு புறம்போக்கு நிலம் அல்லது நில உச்சவரம்பு சட்டத்தின் மூலம் கையகப்படுத்தப்பட்ட நிலம் தேர்வு செய்து நிலம் வழங்கப்பட்ட பின் பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[பொது மேலாளர், தநாஅபோக (மதுரை) லிட், விருதுநகர் மண்டலம், விருதுநகர் அவர்களின் கடித எண். தஅபோக/வஇ/சி2/2678/2011, நாள்: 21-9-2011.]

குழுவின் பரிந்துரை

(6)

காரியாபட்டி கிளை அரசு போக்குவரத்து பணிமனைக்கு நிரந்தர கட்டிடம் அமைப்பதற்கு அரசு நிலங்கள் இல்லாத நிலையில் தனியார் நிலங்களை எடுப்பதற்கு நில உரிமையாளர்களிடமும் மாவட்ட நிர்வாகத்திடமும் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
4	844	திரு. பி.ர. நடராஜன், வேப்பங்குளம், பிள்ளையார்குளம் அஞ்சல்.	1. திருவில்லிபுத்தூர் – இராஜபாளையம் (வழி) மடவார்விளாகம், லட்சுமியாபுரம், பொட்டல்பட்டி, துலுக்கன்குளம், கண்ணார்பட்டி, பெருமாள் தேவன்பட்டி, பிள்ளையார்குளம், இராமகிருஷ்ணாபுரம், புதூர், கோபாலபுரம், வேப்பங்குளம், சத்திரப்பட்டி. 2. திருவில்லிபுத்தூர் – கலிங்கபட்டி (வழி) மடவார் விளாகம், லட்சுமியாபுரம், பொட்டல்பட்டி, துலுக்கன்குளம், கண்ணார்பட்டி, பெருமாள் தேவன்பட்டி, பிள்ளையார்குளம், கோபாலபுரம், வேப்பங்குளம், சத்திரப்பட்டி, எஸ். இராமலிங்காபுரம், வடகரை, தென்கரை ஆகிய வழித் தடங்களில் பேருந்து வசதி கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

1. திருவில்லிபுத்தூர் – இராஜபாளையம் (வழி) வேப்பங்குளம் தடத்தில் தினசரி 3 நகர் பேருந்துகள் மூலம் 11 தனி நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன. மேற்படி 11 தனி நடைகளில் 3 தனி நடைகள் மட்டும் வன்னியம்பட்டி வழியாகவும் 8 தனி நடைகள் பெருமாள்தேவன்பட்டி வழியாகவும் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

2. பெருமாள்தேவன்பட்டியில் இருந்து திருவில்லிபுத்தூர் சுமார் 7.0 கிமீ தூரத்தில் உள்ளது. இராஜபாளையம் 13 கிமீ தூரத்தில் உள்ளது. பெருமாள்தேவன்பட்டியிலிருந்து இராஜபாளையத்திற்கு தினசரி 16 தனி நடைகள் பேருந்து வசதி உள்ளது.

இராஜபாளையத்தில் இருந்து கலிங்கப்பட்டிக்கு தினசரி 58 தனி நடைகள் பேருந்து வசதி உள்ளது. திருவில்லிபுத்தூர் – கலிங்கப்பட்டி (வழி) பெருமாள் தேவன்பட்டி வழித்தடத்தில் பயணிகள் பயன்பாடு இல்லாத காரணத்தால் பேருந்து இயக்கம் செய்வதற்கான தேவை எழவில்லை.

[பொது மேலாளர், தநாஅபோக (மதுரை) லிட், விருதுநகர் மண்டலம், விருதுநகர் அவர்களின் கடித எண். தஅபோக/வஇ/சி2/2679/2011, நாள்: 21–9–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள வழித்தடங்களில் பேருந்து இயக்கப்படுகிறதா என ஒரு ஆய்வாளரை நியமித்து கண்காணிக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
5	845	திரு. பி. கோகுல்கிருஷ்ணன், பெருமாள்தேவன்பட்டி, பிள்ளையார்குளம், அஞ்சல், திருவில்லிபுத்தூர் தாலுகா.	1. பெருமாள்தேவன்பட்டி கிராமம் வழியாக ஆலங்குளம் மற்றும் கலிங்கப்பட்டி நிறுத்தப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்கக் கோருதல். 2. திருவில்லிபுத்தூர் – சிவகாசி தடப் பேருந்தை பெருமாள்தேவன்பட்டி வழியாக இயக்கக் கோருதல். 3. திருவில்லிபுத்தூர் – கோவில்பட்டிக்கு மடவார் விளாகம், லட்சுமியாபுரம், இனாம் கரிசல் குளம், பெருமாள்தேவன்பட்டி, பழையசென்னல் குளம், அட்டமில், கீழராஜகுலராமன், ஆலங்குளம், வெம்பக்கோட்டை வழியாக இயக்கக் கோருதல். 4. திருவில்லிபுத்தூர் – இராஜபாளையம் (வழி மடவார்விளாகம், லட்சுமியாபுரம், இனாம் கரிசல்குளம், பெருமாள்தேவன்பட்டி, பழைய சென்னல்குளம், அட்டமில், சத்திரப்பட்டி வழியாக இயக்கக் கோருதல்.

1. a) திருவில்லிபுத்தூர் – ஆலங்குளம் (வழி) பெருமாள் தேவன்பட்டி,

   b) திருவில்லிபுத்தூர் – கலிங்கபட்டி (வழி) பெருமாள் தேவன்பட்டி ஆகிய இருவழித்தடங்களில் இயக்கப்பட்ட நகர் பேருந்துகளின் நடை பயணிகள் பயன்பாடு இல்லாத காரணத்தால் சுமார் 15 வருடங்களுக்கு முன்பாக நிறுத்தப்பட்டு வெவ்வேறு வழித் தடங்களில் பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் கிராம மக்கள் வசதிக்காக பேருந்து இயக்கம் செய்யப்பட்டு வருகிறது.

   திருவில்லிபுத்தூரிலிருந்து ஆலங்குளத்திற்கு அரசு நகர் பேருந்து 18.00, 19.05 ஆகிய நேரங்களில் தினசரி 2 தனி நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் திருவில்லிபுத்தூரிலிருந்து அட்டைமில் வரை காலை 6.50, 10.10, 11.30 மாலை 16.10, இரவு 19,15 ஆகிய நேரங்களில் அரசு நகர் பேருந்து இயக்கம் செய்யப்படுகிறது. மேற்படி வழித் தடத்தில் தனியார் பேருந்து கோவில்பட்டிக்கு தினசரி 6 தனி நடைகள் இயக்கம் செய்யப்படுகிறது.

   இராஜபாளையத்திலிருந்து அட்டைமில் வழியாக ஆலங்குளத்திற்கு தினசரி 53 தனி நடைகள் பேருந்து வசதி உள்ளது.

   எனவே மேற்படி வழித்தடத்தில் பகுதி வாரியாக பேருந்து வசதி உள்ளதாலும் பயணிகள் பயன்பாடு அதிகரிக்காத காரணத்தாலும் மீண்டும் பேருந்து இயக்கம் செய்ய தேவை எழவில்லை.

2. திருவில்லிபுத்தூர் – சிவகாசி (வழி) அச்சம் தவிழ்த்தான், விளாம்பட்டி வழித்தடத்தில் திருவில்லிபுத்தூரிலிருந்து தடம் எண் F31A மூலம் 8.20, 11.15, 14.15, 17.15, 20.20 ஆகிய நேரங்களிலும், சிவகாசியிலிருந்து 6.40, 9.45, 12.45, 15.35, 18.35 ஆகிய நேரங்களிலும், திருவில்லிபுத்தூரிலிருந்து தடம் எண் F31B மூலம் 6.50, 9.50, 13.00, 15.50, 18.50 ஆகிய நேரங்களிலும் சிவகாசியிலிருந்து 8.20, 11.30, 17.15 ஆகிய நேரங்களிலும் நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 18 தனி நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன. மடவார் விளாகம், லட்சுமியாபுரம், பொட்டல்பட்டி, தலுக்கன்குளம், கண்ணார்பட்டி, பெருமாள்தேவன்பட்டி ஆகிய கிராமங்கள் திருவில்லிபுத்தூருக்கு மிக அருகில் 5 கிமீ சுற்றில் உள்ளதால் சிவகாசி செல்லும் பயணிகள் திருவில்லிபுத்தூர் வந்து சிவகாசி செல்கின்றனர். திருவில்லிபுத்தூர் – சிவகாசி (நேர்வழி) 24.0 கி.மீ. ஆகும். மனுதாரர் கோரியுள்ள வழித்தடம் சிவகாசி–திருவில்லிபுத்தூர் (வழி) பெருமாள் தேவன்பட்டி 33.0 கி.மீ. ஆகும். கோரிக்கை வழித்தடம் அதிக தூரம் என்பதாலும் திருவில்லிபுத்தூர் – சிவகாசிக்கு அடிக்கடி பேருந்துகள் (234 தனி நடைகள்) நடைகள் இயக்கப்பட்டு வருவதாலும் கோரிக்கை வழித்தடத்திற்கு தேவை எழவில்லை.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடங்களில் பேருந்தினை இயக்கிட நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

3. திருவில்லிபுத்தூரில் இருந்து கோவில்பட்டிக்கு சிவகாசி, சாத்தூர் வழியாக தினசரி 8 தனி நடைகள் பேருந்து வசதி உள்ளது. கோரிக்கை வழித்தடத்தில் தனியார் பேருந்து ஒன்று தினசரி 3 தனி நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி 3 தனிநடைகளில் பயணிகள் பயன்பாடு மிகக் குறைவாக உள்ளது. பயணிகள் பயன்பாடு அதிகம் இல்லாத வழித்தடத்தில் கூடுதல் பேருந்து இயக்கம் செய்ய தேவை எழவில்லை. திருவில்லிபுத்தூரிலிருந்து சிவகாசிக்கும் சிவகாசியில் இருந்து கோவில்பட்டிக்கும் அடிக்கடி பேருந்து வசதி உள்ளது. அட்டைமில்லிற்கும் இராஜபாளையத்திற்கும் இடையில் தினசரி 53 தனி நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

4. கோரிக்கை வழித்தடத்தில் தனியார் நகர் பேருந்து மூலம் தினசரி 12 தனி நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகின்றன. மடவார்வளாகம் நிறுத்தத்தில் இருந்து இராஜபாளையம் 10.0 கிமீ. தொலைவில் உள்ளதால் கோரிக்கை வழித்தடத்தை மடவார்வளாக மக்கள் பயன்படுத்தமாட்டார்கள்.

   லட்சுமியாபுரம், இனாம்கரிசல்குளம், பெருமாள் தேவன்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் 2.0 கிமீக்கும் குறைவான தூரத்தில் உள்ள வன்னியம்பட்டி விலக்கு பேருந்து நிறுத்தத்திற்கு சிற்றுந்துகள் மூலம் வந்து அங்கிருந்து இராஜபாளையம் செல்கின்றனர். கோரிக்கை வழித்தடத்தில் நேரடி பயணிகளின் பயன்பாடு குறைவாக இருக்கும்.

   கோரிக்கை வழித்தடம் சுற்றுப் பாதையாக 30.0 கிமீ தூரமாக இருப்பதாலும் பயண நேரம் கூடுதலாகவும் உள்ளதால் இவ்வழித்தடத்தை பயன்படுத்த பயணிகள் விரும்ப மாட்டார்கள். எனவே கோரிக்கை தடத்தில் கூடுதல் பேருந்து இயக்க தேவை எழவில்லை.

[பொது மேலாளர், தநாஅபோக (மதுரை) லிட், விருதுநகர் மண்டலம், விருதுநகர் அவர்களின் கடித எண். தஅபோக/வஇ/சி2/3237/2011, நாள்: இல்லை.]

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
6	849	திரு. M.S. வேலாயுதராஜா, தலைவர், 264, திருவனந்தபுரம் தெரு, இராசபாளையம்.	இராசபாளையம் நகராட்சியில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் சொக்கர் கோவில் முதல் பழைய பேருந்து நிலையம் வரை ஆக்கிரமிப்பு செய்ததை அகற்ற கோருதல் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள மரங்களை அகற்றக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

இராசபாளையம் நகராட்சி ஆணையாளர், வட்டாட்சியர் மற்றும் காவல்துறை துணை கண்காணிப்பாளர் ஆகியோருடன் இணைந்து 03-02-2012 அன்று ஆக்கிரமிப்பு அகற்றம் செய்யப்படும். மேலும் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள மரங்கள் வருவாய் கோட்டாட்சியர் அனுமதி பெற்று விரைவில் அகற்றப்படும்.

[கோட்டப் பொறியாளர் (தே.நெ.), திருநெல்வேலி அவர்களின் க. எண். 9/2012/ அ4/நாள்: 04-01-2012.]

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தில் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை கோட்டப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) நகராட்சி மற்றும் காவல் துறை ஆகியோர் ஆராய்ந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
7	851	திரு. ச. மாரியப்பன், தலைவர், மக்கள் நல உரிமைச் சங்கம், சூலக்கரை மேடு, விருதுநகர்.	கூரைக்குண்டு ஊராட்சி சூலக்கரை மேடு விரிவாக்கப் பகுதிக்கு அடிப்படை வசதிகள் வேண்டுதல். 1) சாலை வசதி, 2) கழிவு நீர் வசதி, 3) தெருவிளக்கு வசதி, 4) தாமிரபரணி குடிநீர் வசதி

(5)

1) சாலை வசதி:–

சூலக்கரை மேடு பகுதியில் வ.உ.சி. நகர், திருமலை மன்னர் நகர், ஈபி. காலனி, சூலக்கரை மேடு ஆகிய தெருக்கள் உள்ளன. மேற்படி தெருக்களில் 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு மெட்டல் சாலைகள் உள்ளது. கீழ்க்கண்ட தெருக்களில் உள்ள மெட்டல் சாலையை தார்சாலையாக மாற்ற மதிப்பீடு கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

1) ரைஸ்மில் தெரு 450 மீட்டர் தூரம் மெட்டல் சாலையை தார்சாலையாக மாற்றுவதற்கு ரூ.6.00 லட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2) வ.உ.சி. நகரில் 2.5 கிலோ மீட்டர் தூரம் மெட்டல் சாலையை தார்சாலையாக மாற்றுவதற்கு ரூ.30.00 லட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட வேலைகளை கூரைக்குண்டு ஊராட்சி பொது நிதியில் இருந்து மார்ச் 2012–க்குள் நிறைவேற்றப்படும்.

2) கழிவுநீர் வசதி:–

சூலக்கரை மேட்டில் இருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தை கடந்து மருந்து குடோன் அருகே கழிவு நீரைக் கொண்டு செல்ல வாய்ப்பு உள்ளது. இதற்கான தூரம் 5 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இப்பணிக்கு ரூ.20.00 லட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான தொகையை சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகி அவர்களது மேம்பாட்டு நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று பணிகள் நிறைவேற்றப்படும்.

3) தெருவிளக்கு வசதி:–

சூலக்கரை மேடு தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளில் எரியாத தெரு விளக்குகள் தற்போது சரி செய்யப்பட்டு விட்டது.

4) தாமிரபரணி கூட்டு குடிநீர் வசதி:–

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 395 கிராம குடிநீர் திட்டத்தின் கீழ் தாமிர பரணி கூட்டு குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற 29–12–2011–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என தமிழ்நாடு குடிநீர் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கூரைக்குண்டு ஊராட்சி சூலக்கரை மேடு பகுதிக்கு தாமிர பரணி குடிநீர் வழங்கப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) விருதுநகர் அவர்களின் கடித எண். அ2/64/2012, நாள்: 05–01–2012.]

(6)

மனுதாரர் குறிப்பிட்ட இடத்திலுள்ள கழிவு நீரை அகற்றுவதற்கு தற்காலிக ஏற்பாட்டை செய்துத் தர வேண்டும் என்றும் அத்துடன் நிரந்தரமாக கழிவு நீரை அகற்றுவதற்காக நிதிஒதுக்கீட்டினை சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகி பெற்று நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
8	859	திரு. ச. ஆதிமூலம், செயலாளர், நுகர்வோர் பாதுகாப்பு மன்றம், பெருமாள்தேவன்பட்டி–626 137.	திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம், பிள்ளையார்குளம் பஞ்சாயத்து – பெருமாள் தேவன்பட்டி கிராமத்திற்கு தாமிரபரணி குடிநீர் திட்டம் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
திருவில்லிபுத்தூர் நகராட்சி மற்றும் 41 வழியோர கிராம கூட்டுக் குடிநீர் திட்டத்தில் பிள்ளையார் குளம் பஞ்சாயத்தைச் சார்ந்த பெருமாள்தேவன்பட்டி கிராமம் சேர்க்கப்படவில்லை. பெருமாள்தேவன்பட்டி குடிநீர் தட்டுப்பாட்டை நிரந்தரமாக நீக்க, விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் திட்டம், 7 நகர பஞ்சாயத்து மற்றும் 395 கிராம குடிநீர் திட்டத்தில் பெருமாள்தேவன்பட்டி இணைக்கப்பட்டுள்ளது. பெருமாள்தேவன்பட்டி கிராமத்தில் 2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 810 ஆகும். தற்போது இத்திட்டத்திற்கான பணி உத்தரவு 29–12–2011ல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தும் பொழுது பெருமாள்தேவன்பட்டி கிராமத்திற்கு தாமிரபரணி குடிநீர் வழங்கப்படும். [நிர்வாகப் பொறியாளர், தகுவவா, கிகுதி கோட்டம், விருதுநகர் அவர்களின் க.எண். 2584/உ.வ./கோ.மனு/11/நாள்: 9–1–12.]	திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம் – பிள்ளையார்குளம் பஞ்சாயத்து பெருமாள்தேவன்பட்டி கிராமத்திற்கு தாமிரபரணி குடிநீர் திட்டம் ஏற்படுத்தித்தரும் பணியினை வட்டார வளர்ச்சி அலுவலருடன் கலந்தாலோசித்து செய்து கொடுக்கப்படவேண்டுமெனவும் அதுவரை போர்வெல் அல்லது சின்டெக்ஸ் ஏற்படுத்தி மாற்று ஏற்பாடு செய்யவும் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9	860	திரு. அ. போத்தி, செயலாளர், கிராம கமிட்டி, பெருமாள்தேவன்பட்டி, பிள்ளையார்குளம் (அஞ்சல்)	பிள்ளையார்குளம் ஊராட்சி பெருமாள்தேவன்பட்டி கூட்டுறவு பால்பண்ணைக்கு முன்பு செல்லும் சாலை (சுமார் 200மீ) வாறுகால் வசதியுடன் சிமெண்ட் தளம் அமைத்துத்தர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
பிள்ளையார்குளம் ஊராட்சி, பெருமாள்தேவன்பட்டி பால்பண்ணைக்கு முன்பு செல்லும் சாலை சுமார் 200மீ உள்ளது. தற்போது திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு தீர்மானத்துடன் ரூ.2.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 76 மீ நீளத்திற்கு சிமெண்ட் தளம் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பெற்றுள்ளது. மீதமுள்ள பகுதியான 124 மீட்டரும் தமிழ்நாடு கிராம ஊராட்சி குக்கிராமங்கள் அபிவிருத்தி திட்டத்தின் (தாய் திட்டம் 2011–12) கீழ் அமைத்து தரப்படும். மேலும் மேற்கண்ட திட்டத்தில் தற்போது சர்வே எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. சர்வே எடுக்கும் பணி முடிவுற்றதும் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் செயல்படுத்தப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), திருவில்லிபுத்தூர் அவர்களின் ந.க.அ2/845/2011/நாள்: இல்லை]	மனுதாரர் குறிப்பிட்டுள்ள பணியினை அவசியம் முடித்துத் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	861	திரு. கோபு ராசாமணி, தலைவர், பெருமாள்தேவன்பட்டி நுகர்வோர் பாதுகாப்பு மன்றம், பிள்ளையார்குளம், திருவில்லிபுத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டம்.	பிள்ளையார்குளம் பெரிய கண்மாய் தூர்வாரி மராமத்து செய்தல் சிதிலடைந்த தெற்கு மடையை புதுப்பித்தல், மணற்கொள்ளையரால் குடையப்பட்ட கரையை பலப்படுத்துதல், மடையின் இருபுறமும் கரை சரிந்து வந்து வாய்க்காலை மூடாமலிருக்க மடையின் இருபுறமும் சிமெண்ட் கவர் எழுப்பி, சிமெண்ட் வாய்க்கால் அமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், பிள்ளையார்குளம் கிராமம், பிள்ளையார்குளம் பெரிய கண்மாய் திருவில்லிபுத்தூர் சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரையின் பேரில் 2008–ம் வருடம் நபார்டு மூலம் ரூ.10 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து கண்மாய் இடது கோடியில் உள்ள தண்ணீர் வெளிப்போக்கி (Left flank weir) மராமத்து பணிகளும் மணல்வாரி அடைப்பு பலகைகள் போட்டு கரை பலப்படுத்தப்பட்டது. தற்போது உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவளத்திட்டத்தின் கீழ் காயல்குடியாறு உபவடிநில தொகுப்பின் மூலம் கண்மாய் சீரமைக்கும் பணியில் கண்மாயில் உள்ள இரண்டு மடைகளிலும் வாய்க்கால் சீரமைக்கும் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் துவங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

[செயற்பொறியாளர், பொபது/நீ.ஆது., மேல் வைப்பாறு வடிநில கோட்டம் இராஜபாளையம், அவர்களின் க.எண். வப/உவ/330M/கோ.24/2011/ நாள்: 30–12–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பணியினை செய்வதற்கு நடவடிக்கை எடுத்து பணி முடித்தவுடன் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிக்கை அனுப்பி வைக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
11	1907	திரு. ஆ. முத்துக்கனி, புனல்வேலி, முருகன் பாடசாலைத் தெரு, பொட்டல்பட்டி (அஞ்சல்), இராஜபாளையம் வட்டம், விருதுநகர் மாவட்டம்.	விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், புனல்வேலி மற்றும் நல்லமங்கலம் இடையே ஆற்றுப்பகுதியில் ஆக்கிரமிப்பை அகற்ற கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், நல்லமங்கலம் மற்றும் புனல்வேலி கிராமத்திற்கு இடையே கோரையாறு செல்கிறது. கோரையாற்றின் கடைசி அணைக்கட்டான இளந்திரைகொண்டான் அணைக்கட்டிற்கு கீழே இது தேவியாற்றில் இணைகிறது. மேற்கண்ட இரண்டு கிராமங்களில் இடைப்பட்ட பகுதியில் உள்ள குடியிருப்புகள் மற்றும் ஆறுகளிலிருந்து குப்பைகள் மற்றும் கழிவுகள் தொடர்ந்து கொட்டப்பட்டு வருகிறது. அதோடு குடியிருப்பு பகுதியில் இருந்து வரும் கழிவு நீரும் ஆற்றில் நேரடியாக விடப்படுகிறது. இதைத் தடுக்கும் பொருட்டு இரண்டு கிராம ஊராட்சிகளுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. மேலும் இளந்திரைகொண்டான் அணைக்கட்டு வரை ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு அது சீர்படுத்தப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக புனல்வேலி கிராமத்திற்கும் மற்றும் நல்லமங்கலம் கிராமத்திற்கும் இடைப்பட்ட ஆற்றுப்பகுதியும் தூர்வாரி சீர்படுத்த நிதி கோரப்பட்டுள்ளது. இப்பணி முன்னுரிமை அடிப்படையில் செய்துதரப்படும்.

[செயற்பொறியாளர், பொது/நீ.ஆது., மேல் வைப்பாறு வடிநில கோட்டம் இராஜபாளையம் அவர்களின் க.எண். வப/உவ/331M/கோ.24/2011/ நாள்: 30–12–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

புனல்வேலி மற்றும் நல்லமங்கலம் இடையே ஆற்றுப் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை 20 நாட்களுக்குள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	*மனு எண்*	*மனுதாரரின் பெயரும், முகவரியும்.*	*மனுவின் சுருக்கம்*
(1)	*(2)*	*(3)*	*(4)*
12	1913	திரு. பி. வெங்கடசாமி, Ex. Army, புதுச்செந்நெல் குளம்.	1. திருவில்லிபுத்தூர், லட்சுமியபுரம், இனாம்கரிசல் குளம், பெருமாள்தேவன்பட்டி, பிள்ளையார் குளம், ராமச்சந்திராபுரம், புதுச்செந்நெல்குளம், அருந்ததியர் காலனி, அச்சம்தவிழ்த்தான், நதிக்குடி, மம்சாபுரம், மாரனேரி, விளாம்பட்டி வழியாக சிவகாசிக்கு பேருந்து வசதி கோருதல். அரசு பேருந்துகளில் ரூட்போர்டில் செந்நெல் குளம் பெயர் குறிப்பிட கோருதல். 2. திருவில்லிபுத்தூர் – இராஜபாளையம் (வழி) பெருமாள்தேவன்பட்டி, பிள்ளையார்குளம் (வேப்பன்குளம், டச்சிங் செய்து) புதுசெந்நெல் குளம், சத்திரப்பட்டி – இராஜபாளையம் செல்லும் பேருந்தை காலையில் 3 நடைகளும், மாலையில் 3 நடைகளும் இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

1. தற்போது திருவில்லிபுத்தூரிலிருந்து பி.இராமச்சந்திராபுரம், புதுசெந்நெல்குளம், அருந்ததியர் காலனி, அச்சம்தவிழ்த்தான், நதிக்குடி, மாரனேரி, விளாம்பட்டி வழியாக சிவகாசிக்கு தினசரி 18 தனி நடைகள் நகரப் பேருந்து இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள லட்சுமியாபுரம், இனாம்கரிசல்குளம், பெருமாள்தேவன்பட்டி ஆகிய ஊர்கள் திருவில்லிபுத்தூருக்கு மிக அருகில் 5.0 கி.மீ. தூரத்திற்குள் அமைந்திருப்பதால் அக்கிராம மக்கள் திருவில்லிபுத்தூர் வந்து சிவகாசி செல்வதையே விரும்புவார்கள். கோரிக்கை வழித்தட தூரம் 33.0 கி.மீ. அதிகம் சுற்றாக இருப்பதால் கோரிக்கை வழித்தடத்தில் பேருந்தை இயக்கம் செய்தால் மேற்கண்ட கிராமங்கள் இதனை பயன்படுத்த விரும்பமாட்டார்கள். திருவில்லிபுத்தூர் – சிவகாசி நேர்வழியில் தினசரி 234 தனி நடைகள் இயக்கப்படுகிறது. வழித்தட தூரம் 24.0 கி.மீ. ஆகும். எனவே கோரிக்கை வழித்தடத்தில் பேருந்து இயக்கம் செய்ய தேவை எழவில்லை.

பேருந்துகளில் உள்ள வழித்தடப் பலகைகளில் பேருந்து செல்லும் இடமும் வழியிலுள்ள ஒன்று அல்லது இரண்டு முக்கிய ஊர்களின் பெயர்கள் மட்டுமே வழித்தடப் பலகையில் குறிப்பிடுவது வழக்கம். அனைத்து கிராம மக்களும் தங்களது ஊர் பெயர் வழித்தடப் பலகையில் குறிப்பிட வேண்டும் என்ற கோரிக்கை வைத்தால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளது.

2. தற்போது திருவில்லிபுத்தூர் கிளையின் மூலம் இயக்கப்படும் நகர் பேருந்து தடம் எண். F06A திருவில்லிபுத்தூரிலிருந்து இராஜபாளையத்திற்கு வேப்பங்குளம் மார்க்கமாக 4 தனி நடைகளும், ரெட்டியபட்டி மார்க்கமாக 6 தனி நடைகளும் இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. கோரிக்கையில் உள்ளபடி மேற்படி பேருந்தின் வழித்தடத்தை மாற்றி இயக்கம் செய்தால் ஏற்கெனவே பயன்பெற்று வரும் கிராம மக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே புதிய வழித்தட நகர் பேருந்துகள் இயக்கம் செய்யப்படும் பொழுது இக்கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

[பொது மேலாளர், தநா.அ.போ.க. (மதுரை) லிட், விருதுநகர் மண்டலம், விருதுநகர் அவர்களின் கடித எண். த.அபோக/வணி/கி2/3235/2011, நாள்: 05–01–2012.]

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் கோரியுள்ள இடங்களுக்கு பேருந்து வசதியினை ஏற்படுத்தித் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
13	1929	திரு. அ. ஜெயசுந்தர், த/பெ. அய்யப்பன், மீனம்பட்டி வடக்கு, அஞ்சுப்பன்குளம் ஊராட்சி, சிவகாசி தாலுகா–626 189.	சிமெண்ட் சாலை மற்றும் வாறுகால் வசதி கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மீனம்பட்டி வடக்கு ஆதிதிராவிடர் முதல் தெரு தனியார் பட்டா நிலமாக உள்ளது. அவர்களுக்கு உரிய வீட்டடி மனையில் இருபுறமும் உள்ளவர்கள் தங்களுக்குரிய வீட்டடி மனையில் இருபுறமும் 3 அடி பாதையை நடை பாதையாக தங்களுக்குள் ஒதுக்கி வைத்து அப்பாதையை பயன்படுத்தி வருகின்றனர். அதிலும் ஒருசில பேர் தங்களுக்குரிய இடத்தில் நடைபாதைக்கு 3 அடி ஒதுக்கீடு செய்யாமல் குறைவாக ஒதுக்கீடு செய்து பயன்படுத்தி வருகின்றனர். ஒட்டுமொத்தத்தில் ஆபிரகாம் வீட்டிலிருந்து குழுவன் வீடு வரை முறையான பாதை ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மேலும் அங்குள்ள 25 குடும்பத்தினரும் ஒட்டுமொத்தமாக சேர்ந்து நடைபாதைக்கு என 10 அடி தெரு ஒதுக்கீடு செய்து அதனை சார்பதிவாளர் அலுவலகத்தில் அரசுக்கு எழுதி கொடுத்தால் தான் அரசிடமிருந்து அவர்களுக்கான அடிப்படை தேவையான வாறுகால் மற்றும் சாலை வசதி செய்து கொடுக்கப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), சிவகாசி அவர்களின் கடித எண். ந.க.பி3/38/2011, நாள்: 04–01–2012.]	சிவகாசி முதல் சாத்தனூர் வரை தேசிய நெடுஞ்சாலையில் பேரிகேட் வைத்து வாகனங்களின் வேகத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
14	1930	திரு. வி.கே. முத்துமாரி தேவன், 3/36, திருமலைபுரம் அருப்புக்கோட்டை (தாலுகா) விருதுநகர் மாவட்டம்.	பள்ளி மாணவ, மாணவியர் வசதிக்காக திருமலைபுரம், தொப்புலாக்கரை ஆகிய ஊர்களிலிருந்து அருப்புக்கோட்டைக்கு காலை 8.00 மணிக்கும் அருப்புக்கோட்டையிலிருந்து தொப்பலாக்கரை, திருமலைபுரம் ஆகிய ஊர்களுக்கு மாலை 6.00 மணிக்கு கூடுதல் பேருந்து வசதி கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

தற்போது அருப்புக்கோட்டையிலிருந்து தொப்புலாக்கரை, திருமலைபுரம், ஆகிய ஊர்களுக்கு காலை 7.40, 9.40, 14.00 ஆகிய நேரங்களில் நகர் பேருந்து இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. தொப்புலாக்கரை, திருமலைபுரம் ஆகிய கிராமங்களிலிருந்து அருப்புக்கோட்டைக்கு 9.45, 16.15 ஆகிய நேரங்களில் அருப்புக்கோட்டைக்கும் நகர் பேருந்து இயக்கம் செய்யப்பட்டு வருகிறது.

நகர் பேருந்துகள் அனைத்தும் பல்முனை தடத் திட்டத்தின் கீழ் பல்வேறு கிராமங்களுக்கு இயக்கப்படுவதால் தற்போதுள்ள பேருந்துகள் மூலம் கூடுதல் பேருந்து வசதி செய்ய இயலாத நிலை உள்ளது.

எனவே புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கம் செய்யப்படும் போது மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

[பொது மேலாளர், த.அ.போ.க. (மதுரை) லிட், விருதுநகர் மண்டலம், விருதுநகர் அவர்களின் கடித எண். த.அ.போக./வஇ/சி2/3236/2011, நாள்: 05-01-2012.]

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடங்களுக்கு கூடுதல் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	41	திரு. U. நல்லகணேசராம், என். புதூர், இராஜபாளையம் ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்–626 102.	என். புதூர் – லதா நகர் பகுதிக்கு தனியாக மேல்நிலைத் தொட்டியுடன் குடிநீர் வசதி கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
இராஜபாளையம் ஒன்றியம், நல்ல நாயக்கன்பட்டி ஊராட்சி, என்.புதூர் கிராமத்தின் ஒரு பகுதியாக லதா நகர் பகுதி உள்ளது. இதன் மக்கள் தொகை சுமார் 320 ஆகும். என். புதூர் கிராமத்திற்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கடந்த 2006–ம் ஆண்டு முதுகுடி கண்மாயில் திறந்தவெளி கிணறு அமைத்து என்.புதூர் குடியிருப்பில் உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்றி கிராமத்தின் எல்லா பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. மனுவில் குறிப்பிடப்பட்ட லதா நகர் பகுதிக்கும் மேற்குறிப்பிட்ட 60000 லிட்டர் தொட்டியிலிருந்து பகிர்மான குழாய் அமைத்து குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. லதா நகர் பகுதி மேடான இடத்தில் அமைந்திருப்பதால் இப்பகுதி மக்களுக்கு போதுமான குடிநீர் கிடைக்காமல் பற்றாக்குறை நிலவுகிறது. மனுதாரர் லதா நகர் பகுதிக்கு (மக்கள் தொகை சுமார் 320 ஆகும்) தனியாக 10,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலைத் தொட்டி வேண்டியுள்ளார்.	என். புதூர் லதா நகர பகுதிக்கு தனியாக மேல்நிலைத் தொட்டியுடன் குடிநீர் வசதி செய்வதற்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு விரைவில் பணிகள் தொடங்கப்படும் என நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கிகுதி கோட்டம், விருதுநகர் தெரிவித்துள்ளதால், துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

(5)

மனுதாரர் கோரியபடி என். புதூர் குடியிருப்புக்கு அருகில் உள்ள லதா நகர் பகுதிக்கு தனியாக விசைப்பம்புடன் கூடிய ஆழ்குழாய் கிணறு மற்றும் 10,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க திட்ட மதிப்பீடு ரூ.3.40 லட்சம் ஆகும்.

திட்டத்திற்கான செலவினை உட்கட்டமைப்பு நிதி மூலம் நிறைவேற்ற மாவட்ட ஆட்சியரால் 9–1–2012 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. அதற்கான ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்படும்.

[நிர்வாக பொறியாளர், த.கு.வ.வா., கிருதி கோட்டம், விருதுநகர். அவர்களின் கடித எண். ச.பே.ம. குழு/மனு 041/உ.வ/வப/11/நாள்: 9–1–2012.]

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2	832	திரு. வெங்கிடசாமி, முன்னாள் இராணுவம், அரசு போக்குவரத்துக் கழகம், கிளை கழக செயலாளர், புதுச்செந்நெல்குளம், திருவில்லிபுத்தூர் ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்.	புதுச்செந்நெல்குளம் மற்றும் அருந்ததியர் காலனி வழியாக செல்லும் பி. இராமச்சந்திராபுரம் முதல் ஆர். ரெட்டியப்பட்டி வரை செல்லும் சாலை புதுப்பிக்கவும் சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றவும் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள புதுச்செந்நெல்குளம் மற்றும் அருந்ததியர் காலனி வழியாக செல்லும் பி. இராமச்சந்திராபுரம் முதல் ஆர். ரெட்டியபட்டி வரை செல்லும் சாலையை புதுப்பிக்க நடப்பு நிதியாண்டில் (2011–2012) ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ. 56.00 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்க ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. விரைவில் வேலை தொடங்க உள்ளது. சாலைப் பணிகள் ஆரம்பிக்கு முன் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு பணிகள் தொடங்கி மார்ச் 31க்குள் குறிப்பிட்ட சாலை புதுப்பிக்கப்படும்.

[கோட்டப் பொறியாளர் (நெ), க (ம) ப, விருதுநகர் அவர்களின் கடித எண். 20/2012/வ4/நாள்: 04–01–2012.]

குழுவின் குறிப்புரை.

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள சாலையை புதுப்பிக்க ரூ. 58 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளதாகவும், விரைவில் பணிகள் துவங்கப்படவுள்ளதாகவும், கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் (மற்றும்) பராமரிப்பு, விருதுநகர் தெரிவித்துள்ளதால் துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	833	திரு. சா. பீமராஜ், குடியிருப்போர் நிர்வாகிகள் சங்கம்/பொது மக்கள் சார்பாக மூன்றாவது வார்டு வசந்தம் நகர், படந்தால்.	படந்தால் ஊராட்சி, வசந்தம் நகர் மூன்றாவது வார்டில் வாறுகால் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்துதர வேண்டுதல்.

துறையின் பதிலுரை

(5)

படந்தால் ஊராட்சி வசந்தம் நகர் மூன்றாவது வார்டில் வாறுகாலும், சிமெண்ட் சாலையும் அமைத்துதர கோரப்பட்டுள்ளது. படந்தால் ஊராட்சி வசந்தம் நகர் மூன்றாவது வார்டில் வாறுகாலும் சிமெண்ட் சாலையும் ஊராட்சி நிதியிலிருந்து ரூ. 1,86,000/–மதிப்பீட்டில் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் பணி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஜனவரி மாதக் கடைசியில் தொடங்கி மார்ச் 2012 மாதத்தில் பணி நிறைவு செய்யப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), சாத்தூர் அவர்களின் கடித எண். ந.க.ப்பி7/2348/2011, நாள்: 04–01–2012.]

குழுவின் குறிப்புரை

(6)

சாத்தூர் வட்டம், படந்தால் ஊராட்சி, வசந்தம் நகர், மூன்றாவது வார்டில் வாறுகால் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளதாகவும் மார்ச் 2012–க்குள் இப்பணி நிறைவு பெறும் என வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) சாத்தூர் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	837	என். பாலகிருஷ்ணன், சி. 23/11 பி.பி.ரோடு, இராஜாஜி நகர், விருதுநகர்–626 001.	தயாளன் இராஜேஷ் காலனிக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 25.00 இலட்சத்தினை முழுமையாக பயன்படுத்தி தூரிதமாக சாலை அமைக்க வேண்டுதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
விருதுநகர் நகராட்சி 36வது வார்டுக்கு உட்பட்ட தயாளன் ராஜேஸ் காலனியில் தார்ச்சாலை அமைக்க சிறப்பு சாலை திட்டத்தின் கீழ் ரூ. 25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி பகுதியில் 970 மீட்டர் நீளத்தில் ரூ.24.74 இலட்சம் செலவில் தார்தளம் அமைக்கப்பட்டு 26-08-2011 அன்று முதல் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. [ஆணையாளர் (பொ.) விருதுநகர் நகராட்சி அவர்களின் கடித எண். இ3/9556/ 2011, நாள்: 29-08-2011.]	துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	839	திரு. பிறை. அ. இராஜகோபால், அன்னை தெரசா தொண்டு நிறுவன அறக்கட்டளை, செட்டுடையான்பட்டி (அஞ்சல்), சாத்தூர்-626 203.	விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் செட்டுடையான்பட்டி ஊராட்சி அம்மாபட்டி, சுந்தரக்குடும்பன்பட்டி சாலையை தார் சாலையாக மாற்ற கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
இக்கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்பட்டது. அதன்படி செட்டுடையான்பட்டி (ஊ) அம்மாபட்டி முதல் சுந்தரக்குடும்பன்பட்டி முடிய உள்ள (2.50 கி.மீ.) சாலையை தார்சாலையாக மாற்ற ரூ. 61.73 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து 2011-2012 நபார்டு (RIDF) திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு கோரி பிரேரணை மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி மாவட்ட ஆட்சியர் அவர்களால் ரூ. 61.73 லட்சத்திற்கு நபார்டு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 13-1-2012 அன்று டெண்டர் வரவேற்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான டெண்டர் முடிவடைந்து வேலை உத்தரவு வழங்கப்பட்டவுடன் இச்சாலைப் பணியை 3 மாத காலத்தில் செய்து முடிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். [ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் அவர்களின் கடித எண். அ2/64/2012, நாள்: 05-01-2012.]	மனுதாரர் குறிப்பிட்டுள்ள மேற்படி சாலைப் பணியினை 3 மாத காலத்திற்குள் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், ஆணையாளர், தெரிவித்துள்ளதால், துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	840	திரு. பிறை. அ. இராஜகோபால், பிறவிப்பட்டி செட்டுடையான்பட்டி அஞ்சல், சாத்தூர்.	1. சாத்தூர் – அருப்புக்கோட்டை (வழி) இராமலிங்காபுரம், கோல்வார்பட்டி, புதுப்பட்டி, அப்பையநாயக்கன்பட்டி, கோட்டூர், வெள்ளையாபுரத்திற்கு பேருந்து வசதி கோருதல். 2. சாத்தூர் –அருப்புக்கோட்டை (வழி) ஆலம்பட்டி, கோல்வார்பட்டி, புதுப்பட்டி, அப்பையநாயக்கன்பட்டி, மல்லையநாயக்கன்பட்டி, பாப்பாகுடி, லட்சுமியாபுரம், பந்தல்குடி பேருந்து வசதி கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
கோரிக்கை வழித்தடத்தில் கீழ்கண்டவாறு பகுதி வாரியாக பேருந்து வசதி உள்ளது. 1. சாத்தூர்–அருப்புக்கோட்டை (வழி) இராமலிங்காபுரம், கோல்வார்பட்டி, புதுப்பட்டி, அப்பைய நாயக்கன்பட்டி, கோட்டூர், வெள்ளையாபுரம் பகுதி வாரியாக பேருந்து வசதி உள்ளது. சாத்தூரில் இருந்து கோட்டூருக்கு (வழி இருக்கன்குடி, அப்பையநாயக்கன்பட்டி) 5.20, 7.20, 9.10, 10.50, 13.00, 14.55, 17.00, 18.50, 21.15, ஆகிய நேரங்களிலும், கோட்டூரிலிருந்து 6.30, 8.20, 10.00 11.45, 13.55, 16.10, 17.55, 19.45, 22.05 ஆகிய நேரங்களில் சாத்தூருக்கு பேருந்து வசதி உள்ளது. சாத்தூரிலிருந்து அம்மாபட்டிக்கு (வழி) இராமலிங்காபுரம் 2 தனி நடைகள் இயக்கப்படுகிறது. தடம் எண் C23A சாத்தூர் – சாத்தூர் கற்றுப் பேருந்து இருக்கன்குடி, அணைக்கரைப்பட்டி ஆலம்பட்டி, நல்லான்செட்டிபட்டி, பிறவிப்பட்டி, செட்டுடையான்பட்டி, கோல்வார்பட்டி, மணியம்பட்டி நடுவப்பட்டி வழித்தடத்தில் 5,30, 6.25, 7.40, 9.20, 12.10, 13.10, 15.45, 17.10, 18.30, 20.20, 21.30, ஆகிய நேரங்களில் 11 கற்று நடைகள் இயக்கப்படுகிறது. கோல்வார் பட்டியில் இருந்து புதுப்பட்டி செல்லும் சாலை புதுப்பட்டி கிராமத்தில் மிகவும் குறுகலாக பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை.	துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

தடம் எண் B34A விருதுநகரிலிருந்து புதுப்பட்டிக்கு பாலவநத்தம், கோட்டூர் வழியாக 6.25, 9.00, 11.05, 13.15, 15.30, 17.30, 19.45, ஆகிய நேரங்களிலும் புதுப்பட்டியிலிருந்து 7.40, 10.00, 12.10, 14.20, 16.30, 18.40, 20.40, ஆகிய நேரங்களிலும் 14 தனி நடைகளும் பேருந்து வசதி உள்ளது.

தடம் எண் A51A அருப்புக்கோட்டையிலிருந்து புதுப்பட்டிக்கு (வழி வெள்ளையாபுரம், கோட்டூர்) 5.30, 6.30, ஆகிய நேரங்களில் இரண்டு தனி நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. அருப்புக்கோட்டையிலிருந்து இருக்கன்குடிக்கு (வழி பாலவநத்தம் கோட்டூர்) 7.55, 8.55, 10.45, 13.15, 16.30, 19.15, ஆகிய நேரங்களிலும் இருக்கன்குடி – அருப்புக்கோட்டை கோட்டூர் வழித்தடத்தில் 9.20, 10.20, 12.05, 14.40, 17.45, 20.30 ஆகிய நேரங்களிலும் இயக்கப்படுகிறது.

மேலும் சாத்தூர் – இராமலிங்காபுரம் வழியாக சந்தையூர், கோல்வார்பட்டி வழித்தடத்தில் மினி பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது.

2. கோரிக்கை வழித்தடத்தை ஆய்வு செய்ததில் சாத்தூர் – அருப்புக்கோட்டை (வழி) ஆலம்பட்டி கோல்வார்பட்டி, புதுப்பட்டி அப்பையநாயக்கன்பட்டி, மல்லையநாயக்கன்பட்டி, பாப்பாகுடி, லட்சுமியாபுரம், பந்தல்குடி வழித்தட தூரம் 42.2 கி.மீ. ஆகும். அரசு கொள்கை முடிவின்படி 35.0 கி.மீ.க்கு அதிகமாக வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்கம் செய்ய இயலாது. இவ்வழித்தடத்திலும் பகுதி வாரியாக பேருந்து வசதி உள்ளது. கோல்வார்பட்டியிலிருந்து புதுப்பட்டி செல்லும் சாலை புதுப்பட்டி கிராமத்திற்குள் மிகவும் குறுகலாக பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை.

[பொது மேலாளர் த.நா. அ.போக (மதுரை) லிட்., விருதுநகர் மண்டலம், விருதுநகர் அவர்களின் கடித எண். த.அபோக/வஇ/சி2/2677/2011, நாள்: 21–09–2011.]

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
7	843	திரு. பி. கோகுல், பெருமாள்தேவன்பட்டி, பிள்ளையார்குளம் அஞ்சல், திருவில்லிபுத்தூர் தாலுகா.	விருதுநகர் மாவட்டம் – திருவில்லிபுத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பிள்ளையார்குளம், (ஊ) பெருமாள்தேவன்பட்டி (கி)1) டோபி தெருவில் 2 தெரு விளக்குகள் அமைத்தல், (2) கால்நடை மருத்துவமனை அருகில் 2 தெருவிளக்குகள் அமைத்தல், (3) பெருமாள் தேவன்பட்டி – துலுக்கன்குளம் சாலையில் சங்கிலியாண்டி கோவில் வரை தெருவிளக்குகள் அமைத்தல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
(1). டோபி தெருவில் 2 தெருவிளக்குகள் அமைக்கும் பணி மிகவும் அத்தியாவசியமான பணியாக இருப்பதால் அதனை ரூ.25,000/– உத்தேச மதிப்பீட்டில் அமைக்க நடப்பு நிதியாண்டில் ஊராட்சி நிதியிலிருந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (2) கால்நடை மருத்துவமனை மற்றும் துலுக்கன்குளம் சாலையில் சங்கிலியாண்டி கோவில் வரை மொத்தம் 7 தெருவிளக்குகளை 13 புதிய மின்கம்பகள் நிறுவி உத்தேச மதிப்பீடு ரூ. 1.85 லட்சத்தில் அமைப்பதற்கு ஊராட்சியில் நிதி வசதியில்லை, எனவே அரசிடமிருந்து தெருவிளக்குகள் அமைப்பதற்கு என சிறப்புநிதி ஒதுக்கீடு ஏதும் வரப்பெற்றால் அவற்றை முன்னுரிமையின் அடிப்படையில் செய்துதர நடவடிக்கை எடுக்கப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களின் கடித எண். ந.க.பி1/83/2011, நாள்: 19–8–2011.]	மனுதாரர் கோரியுள்ள இடத்தில் தெரு விளக்குகள் பிப்ரவரி 15ஆம் தேதிக்குள் அமைத்துக் கொடுக்கப்படும் என வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.), ஸ்ரீவில்லிபுத்தூர் தெரிவித்துள்ளதால் துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
8	847	கிராம பொதுமக்கள், கிழவனேரி கிராமம், காரியாபட்டி வட்டம், விருதுநகர் மாவட்டம்.	20 ஆண்டுகளாக தூர் வாரப்படாமல் உள்ள கிழவனேரி கண்மாயை தூர்வாரக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

நபார்டு திட்டத்தில் ஆர்.ஐ.டி.எப் 18 ல் 2012–2013ம் ஆண்டில் பணியினை எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டு கிழவனேரி கண்மாய் கரையை பலப்படுத்துதல், மடைகள் சரி செய்தல் ஆகியவற்றிற்கு மதிப்பீடு ரூ.34.10 லட்சத்திற்கு கருத்துரு தலைமைப்பொறியாளர், பொபது. நீஆ.அ., மதுரை மண்டலம், மதுரை மூலமாக தலைமைப்பொறியாளர், பொ.ப.து., திட்ட உருவாக்கம் சென்னை அவர்களுக்கு 2–1–2012 அன்று அனுப்பப்பட்டுள்ளது.

[செயற்பொறியாளர், இ.நீ.ஆ.அ.இ. பொபது. குண்டாறு வடிநிலக் கோட்டம் மதுரை–2 அவர்களின் கடித எண். இவஅ2/கோ–9/2011, நாள்: 4–1–2012.]

குழுவின் குறிப்புரை.

(6)

மனுதாரர் குறிப்பிட்ட பணியை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக செயற்பொறியாளர், பொதுப் பணித்துறை குண்டாறு வடிநிலக்கோட்டம், நீர்வள ஆதார அமைப்பு இயக்குநர், மதுரை தெரிவித்துள்ளதால் துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9	848	திரு. M.S. வேலாயுதராஜா, தலைவர், தென்மாவட்ட கரும்பு உற்பத்தியாளர் சங்கம், 264, திருவனந்தபுரம் தெரு, இராஜபாளையம் வட்டம், விருதுநகர் மாவட்டம்.	இராஜபாளையம் கொண்டனேரி கண்மாயில் கல்யாணமண்டபங்கள், பெரிய கோவில்கள் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்றக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் வட்டம், கொண்டனேரி கண்மாய் உலகவங்கித் திட்டத்தில் தமிழ்நாடு அரசு நீர்வள நிலவளத் திட்டத்தின் பகுதி-III-ன் மூலம் தற்போது நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக கண்மாயின் எல்லை கற்கள் நடும் பணி நடைபெற்று வருகிறது. தற்போது கண்மாய் முழு அளவு தண்ணீர் உள்ளது. தண்ணீர் வற்றியவுடன் மீதம் உள்ள வேலைகள் முடிவுற்றபின் வட்டாட்சியர் மற்றும் நகராட்சி அலுவலர்கள் உதவியுடன் அனைத்து ஆக்கிரமிப்புகளையும் கண்டறிந்து அவற்றை அகற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். [செயற்பொறியாளர், பொபது. நீஆது., மேல் வைப்பாறு வடிநிலக் கோட்டம் இராஜபாளையம் அவர்களின் கடித எண். வப/உவ/329M/கோ.24/2011, நாள்: 30-12-2011.]	துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	850	திருமதி செ. சுப்புலட்சுமி, 35வது வார்டு நகர்மன்ற உறுப்பினர், 89/1, தெற்கு ரத வீதி, வெள்ளைக்கோட்டை, அருப்புக்கோட்டை–626 101, விருதுநகர் மாவட்டம்.	விருதுநகர் மாவட்டம் – அருப்புக்கோட்டை – சொக்கலிங்கபுரம்– அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் திருக்கோயில் தெப்பக்குளம் தண்ணீர் வரத்து பாதை வழி அடைப்பட்டுள்ளது சம்பந்தமாக.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுதாரர் குறிப்பிட்டுள்ள விருதுநகர் மாவட்டம் – அருப்புக்கோட்டை– சொக்கலிங்கபுரம்–அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் திருக்கோயில் தெப்பக்குளம் தண்ணீர் வரத்து பாதை அடைபட்டு குளம் வறண்டு காணப்படுகிறது. மேற்கூறிய நீர் வரத்து பாதையின் ஒரு பகுதி திருவில்லிபுத்தூர்–சிவகாசி–விருதுநகர்–அருப்புக்கோட்டை–திருச்சுழி–நரிக்குடி–பார்த்திபனூர் சாலை கி.மீ. 64/6ல் (அருப்புக்கோட்டை நகருக்குள்) உள்ளது. இந்த தண்ணீர் வரத்து பாதை கட் ஸ்டோன் பாலமாக உள்ளது. கட் ஸ்டோன் பாலம் தண்ணீர் பாதை செல்லும் அளவு 0.45 X 0.90மீ ஆக அமைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது கட் ஸ்டோன் கீழே விழுந்து தண்ணீர் வரத்து பாதை அடைப்பட்டுள்ளது. தண்ணீர் வரத்து பாதையின் மொத்த நீளம் 65மீ ஆகும். இதில் நெடுஞ்சாலைத்துறை எல்லைக்குள் உள்ள தண்ணீர் வரத்து பாதையின் அளவு 12மீ ஆகும். மேற்கூறிய கட் ஸ்டோன் பாலத்தை கான்கீரிட் பாலமாக அமைப்பதற்கு ரூ. 2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு சிறப்பு தலைமைப் பொறியாளர் (நெ), திருநெல்வேலி அவர்களின் அனுமதிக்காக அனுப்பி மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மதிப்பீடு ஒப்புதல் பெற்ற பின் வேலைகள் துவங்கி விரைவில் முடிக்கப்படும். [கோட்டப் பொறியாளர் (நெ) க (ம) ப, விருதுநகர், அவர்களின் கடித எண். 20/2012/வ4/நாள்: 04–01–2012.]	மனுதாரர் குறிப்பிட்டுள்ள பணியினை இரு மாதத்தில் முடித்து விடுவதாக கோட்டப்பொறியாளர், (நெ), க(ம)ப, விருதுநகர் தெரிவித்துள்ளதால் துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
11	852	பொது மக்கள் இராஜபாளையம்.	காயக்குடி ஆற்றுப்படுகையில் உள்ள மயானத்திற்கு அடிப்படை வசதிகள் செய்து தர கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
2011–12ம் ஆண்டு இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கீட்டில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. [வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.(பொ), இராஜபாளையம் அவர்களின் கடித எண். பி2/2471/2011, நாள்: 04–12–2011.]	மனுதாரர் குறிப்பிட்டுள்ள மயானத்தின் பராமரிப்புப் பணியை செய்வதற்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் தெரிவித்துள்ளதால் துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
12	855	பொதுமக்கள், கீழப்புதுத் தெரு, 20வது வார்டு, ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர்.	ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி வார்டு 20 கீழப்புதுத் தெரு வடக்கு கடைசியில் உள்ள ஓடை தடுப்புச் சுவர் உயர்த்தி கட்டவும் கீழப்புதுத் தெரு கற்பக விநாயகர் கோவில் தெரு இணைப்பு சாலை அமைத்து தரக் கோருதல்.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்	துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
13	858	பொதுமக்கள் அப்பையநாயக்கன்பட்டி கிராமம், சிவகாசி வட்டம், விருதுநகர் மாவட்டம்.	அப்பையநாயக்கன்பட்டி கிராம விவசாயிகள் தங்களது மானாவாரி கரிசல் நிலங்களுக்கு உழவு மற்றும் விதைப்பு பணி செய்திட மாட்டு வண்டி மற்றும் டிராக்டர்கள் சென்று வர உள்ள பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கோருதல்.	அப்பையநாயக்கன்பட்டி கிராம விவசாயிகள் தங்களது மானாவாரி கரிசல் நிலங்களுக்கு உழவு மற்றும் விதைப்பு பணி செய்திட மாட்டு வண்டி மற்றும் டிராக்டர்கள் சென்று வர உள்ள பாதை (புல எண். 643) அளக்கப்பட்டு கல் ஊன்றப்பட்டு விட்டன மற்றும் பாதையிலிருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டன. இனிவரும் காலங்களில் மேற்படி பாதையினை ஆக்கிரமிப்புகள் ஏற்படாத வண்ணம் பராமரித்து கொள்வோம் என கிராமத்தின் விவசாயிகளும் பொதுமக்களும் வாக்குமூலம் அளித்துள்ளனர்.	துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

[வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம் சிவகாசி வட்டம், சிவகாசி அவர்களின் கடித ந.க. எண். அ2/தப173/2011, நாள்: 05–09–2011.]

கீழப்புதுத் தெருவின் வடக்கு கடைசியில் உள்ள பெரியகுளம் கண்மாய் ஒடை பொதுப் பணித் துறைக்கு சொந்தமானதால் பொதுப் பணித் துறை உதவிப் பொறியாளருடன் இடம் பார்வையிடப்பட்டது. மேற்படி ஓடையில் மழை காலத்தில் தண்ணீர் செல்லும் போது தெருவிற்குள் வர வாய்ப்பு இல்லை. எனவே தடுப்புச் சுவர் தேவையில்லை, கீழப்புதுத் தெரு கற்பக விநாயகர் கோவில் தெரு இணைப்பு தார் சாலை மேம்பாடு செய்யும் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி மேற்கொள்ளப்படும்.

[ஆணையாளர், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அவர்களின் கடித ந.க. எண். 5513/2011/இ1, நாள்: 29–8–2011.]

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பணி 2012–2013 நிதி ஆண்டில் செய்து முடிக்கப்படும் என ஆணையாளர், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி தெரிவித்துள்ளதால் துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
14	862	திரு. கே.எஸ்.எஸ். சண்முகம், 19/116, காலனி குடியிருப்பு, அருப்புக்கோட்டை ரோடு, விருதுநகர்.	விருதுநகர் – ரோசல்பட்டி மற்றும் அருப்புக்கோட்டை யூனியன் பெரிய வள்ளிக்குளம் பஞ்சாயத்து விருதுநகர் கல்லூரி சாலையிலிருந்து – கல்லூரியின் மேற்கிற்கும் தனியார் நிலங்களுக்கும் மற்றும் 116 காலனிக்கு கிழக்கு இடையே அருப்புக்கோட்டை ரோடு வரை உள்ள ஓடையினை தூர்வாரக் கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
செந்திக்குமார நாடார் கல்லூரியின் தென்புறத்தில் உள்ள ஓடை, 116 காலனி மற்றும் கல்லூரி சாலை முதல் அருப்புக்கோட்டை ரோடு வழியாக குல்லூர் சந்தை அணை வரை சுமார் 5 கி.மீ. நீளம் உள்ளது. இந்த ஓடையை 11 மீட்டர் அகலத்தில் 1 மீட்டர் ஆழத்தில் தூர்வாரி செயல்படுத்த சுமார் ரூ. 35 லட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து சிறப்பு நிதி ஒதுக்கீடு பெற்று செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் அவர்களின் கடித எண். எ2/2111/2011, நாள்: 05–01–2012.)	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
15	863	திரு. மு. முகம்மது எகியா, தலைவர், விருதுநகர் மாவட்ட உபயோகிப்பாளர் உரிமைக் கமிட்டி, 339, ரயில்வே ஸ்டேஷன் ரோடு, சின்னப்பள்ளி வாசல் கட்டிடம், விருதுநகர்–626 001.	விருதுநகரில் உள்ள கௌசிகா ஆற்றினை ஆழப்படுத்தி மற்றும் அகலப்படுத்திக் கோடைக்காலங்களில் தண்ணீர் கஷ்டம் இல்லாமலும், மழைக் காலங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்படாமலும் பாதுகாத்துத் தருமாறு கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

விருதுநகர் மாவட்டம், அய்யனார் நகர், பர்மா காலனி, அகமது நகர், சிவகாமிபுரம் கோட்டைப்பட்டி, அல்லம்பட்டி ஆற்றுப்பாதை தேவர் நகர், பாத்திமா நகர் பகுதிகளில் கௌசிகா நதி மூலம் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு பாதிப்புகள் நிகழா வண்ணம் இருப்பதற்கு, மேற்படி இடங்கள் விருதுநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடன் 28–07–2011 அன்று கூட்டுப்புல ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவில் தோராய நிதியாக ரூ. 70.00 இலட்சத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடம் கருத்துரு அளிக்கப்பட்டுள்ளது. நிதி கிடைக்கும் பட்சத்தில், திட்டம் செயலுக்கு கொண்டு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கௌசிகா நதியின் குறுக்கே தடுப்பணை சம்மந்தமாக, வடமலைகுறிச்சி கிராமத்தில் ரூ. 37.20 இலட்சத்திற்கும், பட்டம்புதூர் கிராமத்தில் ரூ. 89.00 இலட்சத்திற்கும், பரளச்சி கிராமத்தில் ரூ. 44.30 இலட்சத்திற்கும், சென்னெல்குடி கிராமத்தில் ரூ. 35.25 இலட்சத்திற்கும் மதிப்பீடு அரசுக்கு அனுப்பியதில், சென்னெல்குடி கிராமத்தில் ரூ. 35.25 இலட்சத்திற்கு தடுப்பணை கட்டுவதற்கு அரசு ஆணை பெறப்பட்டுள்ளது.

(செயற்பொறியாளர், நீ.ஆ.அ., வைப்பாறு வடிநில கோட்டம், விருதுநகர் அவர்களின் கடித எண். மற்றும் நாள் இல்லை.)

குழுவின் குறிப்புரை.

(6)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள பணியினை செய்வதற்கு அரசிடமிருந்து அரசாணை பெறப்பட்டுள்ளது எனவும் இப்பணி விரைவில் தொடங்கப்படும் எனவும் செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, வைப்பாறு வடிநில கோட்டம், விருதுநகர் தெரிவித்துள்ளதால் துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
16	1936	திருமதி. கே. அஜ்மீர் பாத்திமா, 20வது வார்டு நகர்மன்ற உறுப்பினர், 36, மீரா உசேன் தெரு, சிவகாசி.	விஸ்வநத்தம் பகுதியில் அமைந்துள்ள காய்கறி அங்காடி கிணற்றில் உள்ள உப்புத் தண்ணீரை சிவகாசி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 28,26,25,22,18 மற்றும் 20 ஆகிய பகுதிகளுக்கு உப்புத் தண்ணீர் விநியோகம் செய்ய கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

மனுதாரர் குறிப்பிட்டுள்ள சிவகாசி நகராட்சிக்குச் சொந்தமான விஸ்வநத்தம் காய்கறி அங்காடியில் அமைக்கப்பட்டுள்ள கிணற்றிலிலுள்ள தண்ணீரை அங்காடி வளாகத்தில் அமைந்துள்ள 126 காய்கறிக் கடைகள், நவீன ஆட்டிறைச்சிக் கூடம் மற்றும் நாய்கள் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான அறுவை சிகிச்சைக் கூடம், அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நாய்களுக்கான ஒய்வறை, அதைப் பராமரிப்பதற்கான பணியாளர்கள் தங்கும் அறை, இவை அல்லாமல் பாலிதீன் (Plastic) பைகளுக்கு மாற்றாக காகித உறைகள் தயாரிக்கும் தொழிற்கூடம் ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்சொன்ன கிணற்று நீர் அந்த வணிகப் பகுதியில் அமைந்துள்ள வணிக நிறுவனங்கள் மற்றும் இதர பயன்பாட்டிற்கே போதுமானதாக இல்லை. ஆகவே அந்த கிணற்று நீரை வேறு எந்த பகுதிகளுக்கும் விநியோகிக்க சாத்தியக்கூறுகள் இல்லை

மேலும் 20வது வார்டு என்பது நான்கு தெருக்களை மட்டும் உள்ளடக்கிய மிகச் சிறிய பகுதியாகும். மிகச் சிறிய பகுதியாக இருந்தாலும் குடிநீர் தவிர்த்து இதர தேவைகளுக்காக நான்கு கைப்பம்பு மற்றும் 10 எண்ணிக்கை சிறு மின்விசை இறைப்பான் (Mini Power Pump) அமைக்கப்பட்டு இதர தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. இவையல்லாமல் தற்பொழுது அதே பகுதியில் ரூ.1,10,000/- மதிப்பீட்டில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. அந்த கிணற்றிலிருந்து சிறு மின் விசை இறைப்பான் மற்றும் விநியோக பகிர்மானக் குழாய் பதிக்கும் வேலைகள் நடைபெற்று வருகிறது. அனைத்து வேலைகளும் முடிந்து 15-01-2012க்குள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்பது தெரிவிக்கப்படுகிறது. மேலே விவரிக்கப்பட்ட சூழ்நிலையில் மனுதாரரால் கோரப்பட்டுள்ள பகுதிக்கு குடிநீர் தவிர்த்து இதர தேவைகளுக்கு போதுமான அளவு தண்ணீர் விநியோகம் செய்யப்படுவதால் மனுதாரர் குறிப்பிட்டுள்ள கிணற்றிலிருந்து நீரை எடுத்து வரும் அவசியம் எழவில்லை.

(மேலாளர், சிவகாசி நகராட்சி அவர்களின் ந.க. எண். 94/2012/இ2, நாள்: 04-01-2012.)

குழுவின் குறிப்புரை.

(6)

துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
17	1961	திரு. எம். சீனிவாசகம், ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி, தமிழ்நாடு பஞ்சாலை பின்புறம், (TNTC Mill) கதவு எண். 5–18–111 அழகர்சாமி இல்லம், போஸ்டல் காலனி, அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.	TNTC பஞ்சாலை மில் நெசவாளர் காலனி அடிப்படை வசதி கோருதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
மனுதாரர் அடிப்படை வசதி கோரிய போஸ்டல் காலனியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 60000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி அமைத்து தெருக்குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தெருவிளக்கு 10 எண்ணம் உள்ளது. கைப்பம்பு ஒன்று உள்ளது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2001–2002ம் ஆண்டில் மகளிர் சுகாதார வளாகம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது மகளிர் சுகாதார வளாகம் ரூ. 78000/– (எழுபத்து எட்டாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் பராமரிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பகுதி பாலையம்பட்டி ஊராட்சியின் விரிவாக்கப் பகுதியாக இருப்பதால் வீடுகள் தொடர்ச்சியாக இல்லாமல் வீடுகள் தனித்தனியாக உள்ளது. மனுதாரர் குடியிருக்கும் தெருவில் 4 வீடுகள் மட்டுமே உள்ளன. மனுதாரர் வீட்டின் முன்பு அடி பம்பு மற்றும் தெரு விளக்கு உள்ளது. கூடுதலாக தேவைப்படும் பகுதிக்கு குடிநீர் குழாய் விரிவாக்கம் செய்து தெருக் குழாய்கள் அமைக்க ரூ. 30000/– மதிப்பீட்டில் ஊராட்சி நிதிமூலம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சாலை வசதி மற்றும் வாறுகால் வசதி வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. [வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.), அருப்புக்கோட்டை அவர்களின் கடித எண். ஆ2/1895/2011, நாள்: 02–01–2012.]	துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
18	1989	திரு. ஆர். பிரபாகரன், 3/சி–வடக்கு பை–பாஸ் சாலை, விருதுநகர்.	நான்கு வழிச்சாலையின் தென்புறம் சர்வீஸ் ரோட்டில் "ஹீரோ ஹோண்டா" கம்பெனி ஷோ ரூம் தென்புறம் மழை நீர் கடத்த வாறுகால் அமைக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை.

குழுவின் குறிப்புரை.

(5)

(6)

ஏற்கனவே நான்கு வழிச்சாலை திட்டம் செயல்படுத்தப்பட்ட போது 50.180 புள்ளியில் இருந்து 55.230 வரை மழை நீர் வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. புள்ளி 55.230 அப்பால் உள்ள பல வர்த்தக நிறுவனங்கள் வாய்க்காலை மணல் கொண்டு மூடி கடைகளுக்குச் சென்று வர பாதையாக பயன்படுத்தி வருகின்றனர். இதனால் மேற்படி வாய்க்காலில் 50 மீட்டர் தூரத்திற்கு மழை தண்ணீர் ஓட்டம் தடைபட்டுள்ளது. ஆக்கிரமிப்பு பாதையை அகற்றி ஒரு மாதத்திற்குள் வாய்க்கால் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[திட்ட இயக்குநர், மதுரை அவர்களின் கடித எண். ஏ2/2111/2011, நாள்: 05–01–2011.]

துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
19	1991	திரு. கே. தாமோதரன், ஊர் பொது மக்கள் சார்பாக, அப்பையநாயக்கன்பட்டி.	அப்பையநாயக்கன்பட்டி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் வழங்குதல்.

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை.
(5)	(6)
விருதுநகர் மாவட்டம், வேம்பக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் அப்பையநாயக்கன்பட்டி ஊராட்சி, மேற்படி கிராமத்தில் மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் கூட்டு குடிநீர் கிடைக்கவில்லை என்று ஊர் பொது மக்கள் 20–07–2011–ல் மனு செய்துள்ளார்கள். மேற்படி கிராமத்திற்கு மானூர் குடிநீர் நாளொன்றுக்கு 7500 லிட்டர் வீதம் சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் 2010–11ம் ஆண்டு தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் இருந்து அமைக்கப்பட்டுள்ள 30,000/– லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை குடிநீர்த் தேக்க தொட்டியில் ஏற்றப்பட்டு கிராம பொது மக்களுக்கு முறையாக குடிநீர் வழங்கப்பட்டுவருகிறது. [வட்டார வளர்ச்சி அலுவலர் (சி.ஊ.), வெம்பக்கோட்டை அவர்களின் கடித எண். ந.க.பி4/1678/2011, நாள்: 04–01–2012.]	துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வினை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் கருக்கம்
(1)	(2)	(3)	(4)
20	1992	ஊர் பொது மக்கள், ரெங்கப்பநாயக்கர்பட்டி நல்லமநாய்க்கன்பட்டி ஊராட்சி, இராஜபாளையம்.	ரெங்கப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் வறட்சியின் காரணமாக குடிநீர் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. உடனடியாக தண்ணீர் பிரச்சனையை தீர்த்து வைக்க கோரல்.

தமிழ்நாடு LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

துறையின் பதிலுரை.	குழுவின் குறிப்புரை
(5)	(6)
ரெங்கப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் 200 குடும்பங்கள் உள்ளது. தற்போது பெய்த மழையின் காரணமாக அனைத்து நீர் நிலைகளிலும் போதுமான அளவு நீர் உள்ளது. ரெங்கப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் மேல்நிலை தொட்டி ஒன்று உள்ளது. இத்தொட்டியிலிருந்து அவ்வூரில் உள்ள மக்களுக்கு 30 நல்லிகள் மூலம் குடிநீர் தட்டுப்பாடின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் புதிதாக 1 போர் போட்டு, கைப்பம்பு அமைக்கப்பட்டுள்ளது. தற்போது குடிநீர் பிரச்சனை இல்லை. [வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) (பொ) இராஜபாளையம் அவர்களின் கடித எண். பி2/2471/2011, நாள்: 04-12-2011.]	ரெங்கப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் தண்ணீர் பிரச்சனையை தீர்த்து வைக்க இராஜபாளையம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) (பொ) அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–III

குழுவினால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள்

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
1	40	திரு. U. நல்ல கணேஷ்ராம், முன்னாள் ஒன்றிய அம்மா பேரவை செயலாளர், என். புதூர், நல்லமநாயக்கன்பட்டி ஊராட்சி.	1. என்புதூரில் வடகரை மெயின் ரோட்டிற்கு கந்தசாமி வீட்டிற்கும் பின்புறத்தில் சின்ன அய்யனார் வீட்டிற்கும் இடையில் புதிய மின் கம்பம் அமைத்து தெரு விளக்கு அமைக்க கோருதல். 2. என் புதூரில் பெரிய கப்பையாநாயக்கர் வீட்டிற்கு அருகே மெயின் ரோட்டில் பாலம் உள்ள இடத்திற்கு பக்கத்தில் மின் கம்பத்திற்கும் இடையில் புதிய மின் கம்பம் அமைத்து மின் விளக்கு அமைக்க கோருதல். 3. என். புதூரில் மேற்கே உள்ள டிரான்ஸ்பார்மரில் இருந்து கிழக்கு பக்கம் செல்லும் பகுதியில் ஒரு புதிய மின் விளக்கு அமைத்து தர கோருதல். 4. திருப்பதி வீட்டிற்கு மேற்கே ரோட்டை ஒட்டி தெரு மின் விளக்கும், நல்லமநாயக்கன்பட்டி செல்லும் மெயின் ரோட்டில் புதிய மின் கம்பம் அமைத்து புதிய தெரு விளக்கு அமைக்க கோருதல். 5. வடகரை மெயின் ரோடு கிழக்கே திருப்பதி வீட்டிற்கு பக்கத்தில் ரோட்டை ஒட்டி நல்லமநாயக்கன்பட்டி மெயின் ரோட்டின் வளைவில் புதிய தெரு விளக்குகள் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை.

(5)

இப்பகுதியில் ஏழு தெரு விளக்குகள் அமைக்க உதவி மின் பொறியாளர் அலுவலகம் ஆசிலாபுரம் மதிப்பீடு தயார் செய்ய விண்ணப்ப கட்டணம் மற்றும் டெபாசிட் தொகை ரூ.56000/- 04-1-2012 அன்று செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி வேலை ஊராட்சி நிதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 25-1-2012-க்குள் பணி முடிக்கப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) (பொ) இராஜபாளையம் அவர்களின் கடித எண். பி2/2471/2011, நாள்: 04–12–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
2	43	திரு. U. நல்ல கணேஷ்ராம், முன்னாள் ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் என். புதூர், நல்லமநாயக்கன்பட்டி ஊராட்சி.	என். புதூர் கிராமத்தில் உயர்நிலைப்பள்ளி மைதானத்தினை ஒட்டியுள்ள பகுதி தென்புறம் தவசிகுளம் கண்மாய் செல்லும் நீரோடை வரை வாறுகால் கட்டித்தர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
இவ்வேலைக்கு ரூ.2.00 லட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மேற்படி வேலை ஒன்றிய பொதுநிதியில் செயல்படுத்துவதற்கு டெண்டர் 25–1–2012–ல் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வேலைக்கு வேலை உத்தரவு வழங்கி 28–2–2012–க்குள் மேற்படி பணி முடிக்கப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) (பொ) இராஜபாளையம் அவர்களின் கடித எண். பி2/2471/2011, நாள்: 04–12–2011.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
3	44	திரு. U. நல்ல கணேஷ்ராம், முன்னாள் ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் என். புதூர், நல்லமநாயக்கன்பட்டி ஊராட்சி.	தவசிகுளம் கண்மாய் கரைக்கு அருகில் உள்ள அமைந்த பெருமாள் கோவில் வளாகத்தில் போர்போட்டு 5000 லிட்டர் கொள்ளளவு உள்ள தண்ணீர் தொட்டி அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
அமைந்த பெருமாள் கோவில் வளாகத்தில் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளது. 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட தொட்டி அமைக்க ரூ. 1.80 மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஊராட்சி ஒன்றிய நிதியில் 25–01–2012–ல் டெண்டர் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வேலைக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு 20–2–2012–ல் பணி முடிக்கப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) (பொ) இராஜபாளையம் அவர்களின் கடித எண். பி2/2471/2011, நாள்: 04–12–2011.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
4	45	திரு. U. நல்ல கணேஷ்ராம், முன்னாள் ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் என். புதூர், நல்லமநாயக்கன்பட்டி ஊராட்சி.	என். புதூர் கிராமத்தில் தர்மராஜ் வீட்டை ஒட்டி வடக்கு தெருவில் 1. சின்னப்ப நாயக்கர் வீடு வரையிலும் 2. கிழமேல் தெருவில் கிருஷ்ணசாமி வீடு வரையிலும் கோபால் வீட்டில் இருந்து கிழமேல் தெரு சி. கந்தசாமி வீடு வரையிலும் கிழமேல் தெரு ராமர் வீடு வரையிலும் சிமெண்ட் தளம் அமைத்தல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
இவ்வேலைக்கு ரூ. 2.60 லட்சம் மதிப்பீட்டில் வேலை செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வேலைக்கு 25–1–2012–ல் டெண்டர் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வேலைக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு 28–2–2012–க்குள் பணி முடிக்கப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) (பொ) இராஜபாளையம் அவர்களின் கடித எண். பி2/2471/2011, நாள்: 04–12–2011.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
5	46	திரு. U. நல்ல கணேஷ்ராம், முன்னாள் ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் என். புதூர், நல்லமநாயக்கன்பட்டி ஊராட்சி.	என். புதூரில் கிராமத்தில் ஊர் பொது சாவடியை ஒட்டி மேற்கே உள்ள தென்வடல் தெருவில் சிமெண்ட் ரோடு அமைத்து தர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
இவ்வேலைக்கு ரூ. 1.20 லட்சம் மதிப்பீட்டில் வேலை செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வேலைக்கு 25–1–2012–ல் டெண்டர் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வேலைக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு 28–2–2012–க்குள் மேற்படி பணி முடிக்கப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) (பொ) இராஜபாளையம் அவர்களின் கடித எண். பி2/2471/2011, நாள்: 04–12–2011.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
6	834	தலைவர், கிராம நிர்வாகக் குழு, பெருமாள்தேவன்பட்டி, பிள்ளையார்குளம் ஊராட்சி.	பிள்ளையார்குளம் ஊராட்சி, பெருமாள்தேவன்பட்டி கிராமத்தில் கட்டப்பட்டுள்ள சேதமடைந்த அனைத்து குழிவுநீர் வாறுகால்களையும் சீரமைத்து தர கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

பிள்ளையார்குளம் ஊராட்சி, பெருமாள்தேவன்பட்டி கிராமத்தில் சேதமடைந்துள்ள அனைத்து கழிவுநீர் வாறுகால்களையும் ஊராட்சி நிதியிலிருந்து ரூ. 2.50 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த 31–1–2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. அன்றைய தினமே வேலை உத்தரவு வழங்கி, 20–2–2012–ல் பணிகள் செய்து முடிக்கப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) திருவில்லிபுத்தூர் அவர்களின் கடித எண். ந.க.பி4/138/2010, நாள்: 17–08–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
7	838	திருமதி. கிருஷ்ணம்மாள், க/பெ. இராமசாமி, B–1/152A, இராமசாமிபுரம், 32–வது வார்டு, அருப்புக்கோட்டை–626 101, விருதுநகர் மாவட்டம்.	அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 32–ல் இராமசாமிபுரம் பகுதிக்கு சின்டெக்ஸ் தொட்டி அமைத்து தாமிரபரணி குடிநீர் விநியோகம் செய்யக்கோருதல்.

மனுவின் பதிலுரை

(5)

அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 32–ல் இராமசாமிபுரம் பகுதியில் மொத்தமுள்ள குடியிருப்புகள் 283 ஆகும். இப்பகுதியில் உள்ள வீட்டுக்குடிநீர் இணைப்புகள் 98 எண்ணம் வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பகுதிக்கு 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி மூலம் 3 நாட்களுக்கு ஒருமுறை தாமிரபரணி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இப்பகுதிக்கு அடிகுழாய் 6 எண்ணம் மற்றும் கரிசல்குளம் கண்மாய் பகுதியிலிருந்து 5 HP மோட்டார் மூலம் குடிநீருக்கு உகந்த (Local Source) குடிநீர் தினமும் காலையில் 3 மணி நேரம் மாலையில் 3 மணி நேரம் வழங்கப்பட்டு வருகிறது.

[ஆணையாளர், அருப்புக்கோட்டை நகராட்சி அவர்களின் ந.க. எண். 60/12/இ1, நாள்: 04–1–2012.]

குழுவின் குறிப்புரை

(6)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
8	846	திரு. வி. இராமசாமி, பி.ஏ.த./பெ. வெள்ளைச்சாமி தேவர் நெல்லிக்குளம், ஆணைக்குளம் (அஞ்சல்).	நெல்லிக்குளம், எஸ். மீனாட்சிபுரம், ரெகுநாதமடை கிராமங்களுக்கு திருச்சுழி, ஆணைக்குளம் செல்ல பேருந்து வசதி கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கோரிக்கை ஏற்கப்பட்டு மேற்கண்ட கிராமங்களுக்கு தினசரி 4 தனி நடைகள் 11–01–2012–ம் தேதி முதல் இயக்கப்படுகிறது. [பொது மேலாளர், தநா.அ.போ.க. (மதுரை) லிட், விருதுநகர் மண்டலம், விருதுநகர் அவர்களின் த.அ.போக. /வ.இ/சி2/2690/2011, நாள்: 21–9–2011.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
9	853	திரு. ஆ. பால்ச்சாமி, த/பெ. ஆண்டியப்பநாடார், 294, மெயின்ரோடு, இனாம்கரிசல்குளம், திருவில்லிபுத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டம்–626 125.	திருவில்லிபுத்தூரில் இருந்து இனாம்கரிசல் குளத்திற்கு பள்ளி நேரத்திற்கு பேருந்து வசதி கோருதல்.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
10	864	ஆதிதிராவிட மக்கள் சார்பாக ஆப்ரகாம் ராசையா (ஆசிரியர் ஓய்வு) வலையப்பட்டி.	வலையப்பட்டி கிராமம் ஆதிதிராவிடர் மக்கள் தெருக்களுக்கு வாறுகால் வசதி கோருதல்

துறையின் பதிலுரை

(5)

திருவல்லிபுத்தூர் – பெருமாள்தேவன்பட்டி (வழி) இனாம்காரிசல்குளம் வழித்தடத்தில் நகர் பேருந்து தினசரி 2 தனி நடைகள் இயக்கம் செய்யப்பட்டு வருகிறது.

மனுதாரரின் கோரிக்கை ஏற்கப்பட்டு பள்ளி நேரங்களில் காலையும், மாலையும் திருவில்லிபுத்தூர்– இனாம்காரிசல்குளம் கிராமத்திற்கு 11–01–2012–ல் முதல் இயக்கப்படுகிறது.

[பொது மேலாளர், தநா.அ.போக. (மதுரை) லிட், விருதுநகர் மண்டலம், விருதுநகர் அவர்களின் கடித எண். த.அ.போக. /வ.இ/சி2/2703/2011, நாள்: 23–9–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

துறையின் பதிலுரை

(5)

ஒன்றிய பொது நிதியிலிருந்து வலையப்பட்டி ஆதிதிராவிடர் மக்கள் தெருவில் 96 மீட்டரில் வாறுகால் மற்றும் வாறுகால் மூடி அமைக்க ஒரு லட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் பெறப்பட்டுள்ளது. 19–01–2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. டெண்டர் முடிந்தவுடன் அன்றைய தினமே வேலை உத்தரவு வழங்கி 10–2–2012–க்குள் வேலை செய்து முடிக்கப்படும்.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) வெம்பக்கோட்டை அவர்களின் கடித எண். ந.க.பி4/1678/2011, நாள்: 26–8–2011.]

குழுவின் குறிப்புரை

(6)

நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

வரிசை எண்.	மனு எண்	மனுதாரரின் பெயரும், முகவரியும்.	மனுவின் சுருக்கம்
(1)	(2)	(3)	(4)
11	1931	திரு. V.U. முத்துமாரிதேவன், 3/36, திருமலைபுரம், அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம்.	விருதுநகர் மாவட்டம், திருச்சுழி ஊராட்சி ஒன்றியம் சுத்தமடம் ஊராட்சியைச் சேர்ந்த திருமலைபுரம் கிராமத்திற்கு உப்புநீர் குடிநீராக வழங்கப்படுவதால் நல்ல குடிநீர் கிடைக்க புதிய ஆழ்குழாய் கிணறு பைப்லைன் அமைத்து தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
சுத்தமடம் ஊராட்சி திருமலைபுரம் கிராமத்திற்கு குடிநீர் வழங்க சாயல்குடி சாலை அருகில் புதிதாக ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணி ரூ. 80000/– மதிப்பீட்டில் ஊராட்சி பொது நிதியிலிருந்தும், பைப்லைன் நீட்டிப்பு செய்து மேல் நிலைத் தொட்டியுடன் இணைக்கும் பணி ரூ.200000/– மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்தும் செய்வதற்கு 31–1–2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. அன்றைய தினமே வேலை உத்தரவு வழங்கப்பட்டு 28–02–2012–க்குள் மேற்படி பணிகள் முடிக்கப்பட்டு குடிநீர் வழங்க உரிய ஏற்பாடுகள் செய்யப்படும். [வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.) திருச்சுழி அவர்களின் கடித எண். ந.க.அ7/107/2012, நாள்: 09–01–2012.]	நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பட்டது.

அ.மு.பி. ஜமாலுதீன்,
செயலாளர்.